# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 01.07.2026
**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை
**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6488/A/2024**

திருமதி. ராதிகா -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் PEW, (I/C),
தலைமையிடம், -- பொது அதிகார அமைப்பு
திருப்பூர் மாவட்டம்.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திருமதி. ராதிகா அவர்கள் ஆஜராகவில்லை |
| பொது அதிகார அமைப்பு | திரு. V. ஆறுமுகம்<br>பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், PEW, (I/C) தலைமையிடம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 11.03.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், ந.க.எண்.132/த.அ.உ.ச/பொ.த.அ.-தி.மா/2024, 08.02.2024 -ன் தகவலில் 29.06.2023-ம் தேதியன்று தங்களது கணவரிடமும், தங்களிடமும் விசாரணை நடத்தப்பட்டது என தகவல் தெரிவித்துள்ளதாகவும், அவ்விசாரணையின் ஒளி நகல் மற்றும் எங்களிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் ஒளி நகல்கள் உட்பட 4 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | 05.04.2024 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 20.04.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | 29.04.2024 |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 07.05.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திரு. V. ஆறுமுகம், பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், திருப்பூர் மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ந.க.எண்.210/த.அ.உ.ச/பொ.த.அ.-தி.மா/2024, 05.04.2024 மற்றும் ந.க.எண்.41/த.அ.உ.ச/பொ.த.அ.-தி.மா/2024, 23.09.2024 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலராலும், C.No.49/Appeal Paper/SP-PIO/TPR/2024, 29.04.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலராலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் ஆஜராகி தனது கருத்துக்களை எடுத்துரைக்காத நிலையில், மனுதாரரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளது உறுதியாகிறது. எனவே, ***பொதுத்தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட தகவல்கள் போதுமானதாகக் கருதி, அதன் அடிப்படையில் இம்மேல்முறையீட்டு வழக்கின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்யப்பட்டு ஆணையத்தால் ஆணையிடப்படுகிறது***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6488/A/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
PEW, (I/C) தலைமையிடம்,
திருப்பூர் மாவட்டம் - 641 603.

**<u>மனுதாரர்</u>**

திருமதி. ராதிகா
47, K.S.பபி இல்லம்,
இராதாகிருஷ்ணன் நகர்,
உடுமலைப்பேட்டை,
திருப்பூர் - 642126.

Copy to file

KRM/PA 07.07.2026